உலக மகளிர் உச்சி மாநாட்டில் – மகளிருக்கான சேவைகளைத் தொடங்கி வைத்து

# பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜன.28-

உலக மகளிர் உச்சி மாநாடு 2026-ஐ தொடங்கி வைத்து, TNWE SAFE திட்டத்தையும், மகளிருக்கான பல்வேறு வாகன சேவைகளையும் கொடியசைத்து தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.01.2026) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், தமிழ்நாடு அரசின் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் இரண்டு நாள் உலக மகளிர் உச்சி மாநாடு 2026 -ஐ தொடங்கி வைத்து, TNWESAFE திட்டத்தையும் தொடங்கி வைத்தார்கள்.

**தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம்**

2030-ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டினை 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் மிக்க மாநிலமாக மாற்றும் தொலைநோக்குப் பார்வையை நனவாக்குவதை கருத்தில் கொண்டு, பெண்களின் பணியிடப் பங்கேற்பு மற்றும் பணியிடப் பாதுகாப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதே தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு (TNWESAFE) திட்டமாகும்.

உலக வங்கியின் ரூ.1,185 கோடி நிதியுதவியுடன்

ரூ.5000 கோடி மதிப்பீட்டிலான TNWESAFE திட்டம் தொடக்கம்

தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்திற்கான TNWESAFE திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் நேற்று தொடங்கி வைத்தார்.

இந்தத் திட்டம், ஐந்து ஆண்டு காலத்திற்கு (2024-2029) 5,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில், உலக வங்கியின் 1,185 கோடி ரூபாய் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட உள்ளது.

**மகளிருக்கான பல்வேறு வாகனங்களின் சேவைகள் தொடங்கி வைத்தல்**

உலக மகளிர் உச்சி மாநாடு தொடக்க விழாவில், முதலமைச்சர் அவர்கள், மகளிர் விடியல் பயணம் மேற்கொள்ளும் வகையில் பத்து PINK பேருந்துகள், மகளிர் பாதுகாப்பிற்காக மகளிர் காவலர்களுக்கு வாகனங்கள், மகளிருக்கு PINK ஆட்டோ போன்றவற்றை வழங்கி, அவற்றின் சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

**புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளுதல்**

தொடர்ந்து, தமிழ்நாட்டில் தொழில் துறைகளில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்துவதற்கான ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில், முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில், UNDP, IPE GLOBAL மற்றும் பல்வேறு தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட அமைப்புகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoUs) கையெழுத்திடப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள், நான் முதல்வன் திட்டத்தின் கீழ் திறன் பயிற்சி பெற்ற மாணவிகளுக்கு பணி நியமன ஆணைகளையும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், அண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டம், தாட்கோவின் CM ARISE திட்டம், கலைஞர் கைவினைத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் மகளிர்க்கு தொழில் தொடங்கி கடனுதவிகளையும் வழங்கினார்.


முன்னதாக முதலமைச்சர் அவர்கள் விழா அரங்கில் பல்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்களின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த அரங்குகளைப் பார்வையிட்டார்.

இந்த மகளிர் உச்சி மாநாட்டில், மாநில திட்டக் குழு, மாநில மகளிர் ஆணையம், தொழில்துறை பிரதிநிதிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் கொள்கை கலந்துரையாடல்களும், திறன் மேம்பாடு, தொழில் முனைவு, பணியிடப் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு சேவைகள் தொடர்பான விவாதங்களும், குறிப்பாக பெண்கள் விவசாயத் துறையிலிருந்து விவசாயம் அல்லாத மற்றும் முறைப்படுத்தப்பட்ட வேலைவாய்ப்புத் துறைகளுக்கு மாறுவதற்கு ஆதரவளிப்பதில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

இந்தக் கலந்துரையாடல்கள், தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் (TNWESAFE) திட்டத்தை செயல்படுத்துவதற்கான மாநில அளவிலான செயல் திட்டத்தைத் தயாரிப்பதற்கு வழிகாட்டியாக இருக்கும்.

இந்த மாநாட்டில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன், சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி கீதாஜீவன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்

இ.கருணாநிதி, தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் தலைவர் திருமதி. ஏ. எஸ்.குமரி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், காவல் துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) க.வெங்கடராமன், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் பி.செந்தில் குமார், போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன், தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட இயக்குநர் திருமதி ஆஷா அஜித், மாநகர் போக்குவரத்துக் கழக இணை மேலாண் இயக்குநர் இராம. சுந்தர பாண்டியன், உலக வங்கி மண்டல இயக்குநர் செம்மெட்டே, மொரிசியஸ் முன்னாள் தலைமை கொறடா திருமதி நவீனா ரம்யாத், TAFE நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி மல்லிகா ஸ்ரீனிவாசன், தொழில் துறை, கல்வித்துறை, பெருநிறுவன சமூகப் பொறுப்பு (CSR) பங்காளர்கள், பல்வேறு சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (27.1.2026) சென்னை, தலைமைச் செயலகத்தில் உள்ள வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கூட்டரங்கில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம். பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நடைபெற்றுவரும் பணிகளை, விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கான ஒருங்கிணைந்த ஆய்வுக்கூட்டம் துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்களுடன் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேயர் திருமதி.ஆர்.பிரியா. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா. சிஎம்டி முதன்மைச் செயலாளர் உறுப்பினர் செயலர் கோபிரகாஷ், மாநகராட்சி ஆணையாளர் ஜெருமரகுருபரன், சிஎம்டிஏ முதன்மை செயல் அலுவலர் சிவஞானம், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் ஸ்ரேயா பி.சிங், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், வடக்கு வட்டார துணை ஆணையாளர், கட்டா ரவி தேஜா, கொளத்தூர் காவல் துணை ஆணையாளர் பி.குமார். தலைமைப் பொறியாளர்கள் (மின்சார வாரியம்) தமிழ்ச்செல்வன், (சென்னை குடிநீர்) ராதாகிருஷ்ணன் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

தூத்துக்குடி வட்டம் – மாப்பிள்ளையூரணி கிராம கடற்கரைப் பகுதியில்

# கடலில் மூழ்கி உயிரிழந்த 3 சிறுவர்களின் பெற்றோருக்கு தலா ரூ.3 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜன. 28 -**

**தூத்துக்குடி மாவட்டம் மற்றும் வட்டம், மாப்பிள்ளையூரணி கிராமம், சிலுவைப்பட்டி மொட்டை கோபுரம் கடற்கரை பகுதியில் கடலில் மூழ்கி உயிரிழந்த மூன்று சிறுவர்களின் பெற்றோருக்கு ஆறுதல் தெரிவித்தும், நிதியுதவியும் வழங்கியும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

தூத்துக்குடி மாவட்டம் மற்றும் வட்டம், மாப்பிள்ளையூரணி கிராமத்தைச் சேர்ந்த செல்வன். திருமணி (வயது 13) த/பெ.வனராஜன், செல்வன். நரேன் ஸ்ரீ கார்த்திக் (வயது 12) த/பெ.ஆறுமுகம் மற்றும் செல்வன்.முகேந்திரன் (வயது 12) த/பெ.கதிரேசன் ஆகிய மூன்று சிறுவர்கள் நேற்று (26.01.2026) மாலை சுமார் 04.15 மணியளவில் மாப்பிள்ளையூரணி கிராமத்தில் உள்ள சிலுவைப்பட்டி மொட்டை கோபுரம் கடற்கரை பகுதியில் கடலில் குளிக்கச் சென்றபோது எதிர்பாராதவிதமாக கடலில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த மூன்று சிறுவர்களின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# மன்னார்குடி ராஜகோபாலசுவாமிகள் கோயில் கும்பாபிஷேகம்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பங்கேற்று சிறப்பிக்கிறார்!

*திருவாரூர், ஜன.28-*

*திருவாரூர் மாவட்டத்தில் உள்ள மன்னார்குடியின் பெருமைகளில் முக்கியமானதாக கருதப்படும் ராஜகோபாலசுவாமிகள் கோயில் தொன்மையையின் அடையாளமாக கருதப்படும் வைணவ கோவிலாகும். இந்த கோவிலின் கும்பாபிஷேகம் இன்று (புதன் 28.01.2026) நடைபெறுகிறது.*

*18 சன்னதிகள், 7கோபுரங்கள் என பிரமாண்ட அமைப்புடன் உள்ள இந்த கோவிலை சீரமைக்க மன்னார்குடி சட்டமன்ற தொகுதி உறுப்பினராக இருந்தபோது டி.ஆர்.பி. ராஜா அவர்கள் வைத்த கோரிக்கைகளை கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் கண்டு கொள்ளாத நிலையில், தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அனுமதியின்படியும், அறநிலைய துறை அமைச்சர் சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்களின்படியும் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்களின் முன்னெடுப்பிலும், அறங்காவல் குழு தலைவர் கருடா இளவரசன் அவர்களின் தலைமையிலான ஆன்மீக நிர்வாகிகள் மேற்பார்வையில் மிகச்சிறப்பாக நடந்தேறி முடிவடைந்துள்ளன.*

*அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அவர்களின் மேற்பார்வையில் அனைத்து துறை அதிகாரிகளின் ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டு, பாதுகாப்பு சுகாதாரம், போக்குவரத்து சீரமைப்பு பணிகள் மிகச்சிறப்பக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.*

*சுமார் 16 கோடிகள் மதிப்பீட்டில் அரண்மனையைப்போல மிகுந்த கவனமுடன் சீரமைப்பு பணிகள் நடைபெற்ற மன்னார்குடி ராஜகோபாலசுவாமிகள் கோயில் கும்பாபிஷேகம், இன்று (புதன் 28.01.2026) நடைபெறுகிறது. லட்சோப ஆன்மீக மக்கள் இன்று இந்த கும்பா பிஷேகத்தில் பங்கேற்கின்றனர்.*

## தமிழ்நாடு மின் கழக தொ.மு.ச. நிர்வாகிகள்

### தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு மின் கழக தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். **38/CPT**, பேரவை இணைப்பு எண். **26**) நிர்வாகிகள் தேர்தல் 25.01.2026 அன்று பேரவை இணைப்பொதுச்செயலாளர் **ஜெ.விஜயகுமார்** அவர்களை ஆணையாளராகக் கொண்டு திருச்சி பெல் தொ.மு.ச. அலுவலகத்தில் நடைபெற்றது. இத்தேர்தலில் கீழ்க்கண்டவர்கள் சங்க நிர்வாகிகளாக வெற்றி பெற்றுள்ளனர்.

**சங்க நிர்வாகிகள்**

| | | |
|---|---|---|
| தலைவர் | – | ச. நடராசன் |
| துணைத் தலைவர்கள் | – | 1) அ. சத்தியராஜ் |
| | | 2) G. ராஜேந்திரன் |
| | | 3) N. சரவணன் |
| | | 4) மு. முருகேசன் |
| | | 5) மு. சடாச்சரம் |
| பொதுச்செயலாளர் | – | பா. மணிமாறன் |
| பொருளாளர் | – | தே. முரளிகுமார் |
| அமைப்புச் செயலாளர் | – | மு. மீனாட்சிசுந்தரம் |
| துணைப்பொதுச்செயலாளர்கள் | – | 1) R. ராமமூர்த்தி |
| | | 2) P. சண்முகம் |
| | | 3) K. வேல்முருகன் |
| | | 4) V.S. அருண்சங்கர் |
| | | 5) தே. மெய்ஞானமூர்த்தி |
| | | 6) கு. மணிகண்டன் |

இடம்:கலைஞரகம்
நாள்:25.01.2026

**மு.சண்முகம், Ex.MP**
பொதுச்செயலாளர்
தொ.மு.ச. பேரவை

இராணிப்பேட்டை மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர்

# இரா.சிவஞானம் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன. 28-

இராணிப்பேட்டை மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் இரா.சிவஞானம் (வயது 73) நேற்று (25.1.2026 - திங்கள்) மறைவுவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த இரா.சிவஞானம் சுமார் 54 ஆண்டு காலம் கழக பணியாற்றியவர். 19 வயதில் கழகத்தில் இணைத்து கொண்ட அவர், வாலாஜா தெற்கு ஒன்றியம் - நவ்லாக் கிராமத்தின் முதல் கிளைக் கழக செயலாளர், மாவட்டப் பிரதிநிதி என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர். இரண்டு முறை ஊராட்சி மன்ற தலைவராகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரது மறைவு செய்தி அறிந்த கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.

132வது வட்டச் செயலாளர் ந.மோ.முரளியின் தந்தை

# ந.மோகனரங்கம் முதலாமாண்டு நினைவுநாள் - படத்திறப்பு!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ.- ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. கே.ஏழுமலை அஞ்சலி!

*சென்னை, ஜன28-*

*சென்னை தென் மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் மேற்கு பகுதி, 132வது வட்டக் கழகச் செயலாளர் ந. மோ. முரளியின் தந்தையும் 120வது வட்டக் கழக முன்னாள் துணைச் செயலாளருமான*



*மறைந்த ந. மோகனரங்கம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் - படத்திறப்பு நிகழ்ச்சி இன்று (28.01.2026- புதன்) காலை 11 மணியளவில் காமராஜர் காலனி, 2வது தெருவில் நடைபெறுகிறது.*

*அன்னாரது திருஉருவப் படத்தை சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ. கருணாநிதி பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை ஆகியோர் திறந்து வைத்து பொது மக்களுக்கு உணவு வழங்குகின்றனர்.*

*நிகழ்ச்சியில் எஸ். மோகன், ரத்னா லோகேஸ்வரன், கோடம்பாக்கம் மு .சத்தியா, கோசு. மணி, மற்றும் வட்டக் கழக செயலாளர்கள் 132 வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் மாவட்ட பகுதி அமைப்பாளர், துணை அமைப்பாளர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்துகின்றனர்.*




குடியரசு தினத்தை முன்னிட்டு (26.1.2026) அன்று குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய் தேசியக் கொடியினை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினார்.



கழக அயலக அணி மாநிலத் துணைச் செயலாளர் மற்றும் 99வது வார்டு மாமன்ற உறுப்பினர் பரிதி இளம்சுருதி தலைமையில், 99வது வார்டுக்கு உட்பட்ட சாலை மாநகரில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, ஏரியா சபா கூட்டம் நடைபெற்றது, இக்கூட்டத்தில் பொதுமக்கள் தங்களின் அடிப்படை பிரச்சனைகள் மற்றும் கோரிக்கைகளை தெரிவித்தனர், மேலும் இக்கூட்டத்தில் கோட்ட பொறியாளர் கே. சிவகுமார், சுகாதாரத்துறை அலுவலர் எஸ். ராஜேந்திரன், சுகாதாரத்துறை ஆய்வாளர் எஸ்.கார்த்திக், குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரிய பொறியாளர் எஸ்.சுபாஷ், மின்சாரத்துறை பொறியாளர் என். ஜாபர், மற்றும் மாநகராட்சி பணியாளர்கள் கலந்து கொண்டனர்.